**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.55/2023**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திலீப் குமார் | மதம் | : இந்து |
| த/பெ | : வேலு | ஜாதி | : -- |
| வயது | : 32 | கிராமம் | : அருங்குளம் |
| தொழில் | : தனியார் நிறுவனம் | வட்டம் | : திருத்தணி |

**06.03.2026**

**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி**

2. 01.01.1988 முதல் 31.12.1974ம் தேதி வரையிலான வில்லங்க சான்று சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(வில்லங்க சான்று பி.வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 27.12.1972ம் தேதியிட்டு சஞ்சீவி மந்தடி, அந்தி மந்தடி ஆகியோர் குப்பன் என்பவருக்கு எழுதி வைத்த கிரைய ஆவணம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 26.07.1969ம் தேதியிட்டு சஞ்சீவி மந்தடி வகையறா கோவிந்த மந்தடிக்கு எழுதி வைத்த பதிவு செய்த அடமான பத்திரயம் இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(அடமான பத்திரம் பி.வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. 01.01.1975 முதல் 27.08.2024ம் தேதி வரையிலான வில்லங்க சான்று இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(வில்லங்க சான்று பி.வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா எண்.33ல் என் தாத்தா குப்பு மந்தடி பெயரில் உள்ள நில உடமை பதிவேடு புத்தகம் அசல் தாக்கல் செய்கிறேன். **(நில உடமை பதிவேடு புத்தகம் பி.வா.சா.ஆ 5 ஆக**

**குறியீடு செய்யப்படுகிறது)** SLR சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(SLR பி.வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா எண்.2238க்கான 10(1) இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(10(1) பி.வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** கனகம்மா சத்திரம் காவல் நிலையத்தில் 27.11.2023ம் தேதியிட்டு கொடுக்கப்பட்ட மனு ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். **(மனு ரசீது பி.வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** கனகம்மா சத்திர காவல் நிலைய குற்ற எண்.21/2024ன் முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(முதல் தகவல் அறிக்கை பி.வா.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

4. வழக்கு சொத்திற்கான அடங்கல் கணக்கு சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(அடங்கல் பி.வா.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 04.01.2023ம் தேதியிட்டு கொடுக்கப்பட்ட வரி ரசீது தாக்கல் செய்கிறேன். **(வரி ரசீது பி.வா.சா.ஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)